(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW15 |
| Name | : | **Thiru.Paneerselvam** |
| Father's Name | : | Thiru.Subbarayan |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **6th November 2025.**

(1, 2 எதிரிகள் முன்னிலையில்லை, அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது ஈரோட்டில் இரயில் நிலையம் அருகில் கரிமேடு என்ற இடத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறையில் கடந்த 10.01.2011 முதல் 30.06.2013 வரை

இணைபோக்குவரத்து ஆணையராக சென்னையில் பணியாற்றி பணிஓய்வு பெற்றேன். நான் கடந்த 10.03.2009 முதல் 08.01.2011 வரை திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்தபோது சிவகங்கை, ஊ.த.க பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து கடித எண். 50/2010/HORTI/SG, நாள்.06.08.2010 ல் கடிதம் பெற்றேன். அந்த கடிதத்தில் புதுக்கோட்டை மாவட்டம் தோட்டக்கலை முன்னாள் உதவி இயக்குநர் திரு.K.சண்முகசுந்தரம் என்பவர் மீது உள்ள வழக்கில் கேட்டுக்கொண்டதற்கிணங்க எங்களது அலுவலக ஆ–பதிவேட்டை பார்வையிட்டதில் TN 57 D 2835 என்ற வாகனம் அம்பாசிடர் கார் நான்கு சக்கர வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனத்தின் சம்பந்தப்பட்ட அறிக்கையை தயார் செய்து எங்களது அலுவலக குறிப்பு எண்.69177/B1/2010, நாள்.19.08.2010–ல் சிவகங்கை மாவட்ட ஊ.த.க பிரிவு காவல் துணைகண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

2. இந்த வாகனம் மதுரை ARAS Auto limited என்ற கம்பெனியிலிருந்து இந்த வாகனம் கடந்த 26.08.1999 ல் திண்டுக்கல் புவனேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தால் ரூ.4,64,855/–க்கு

வாங்கப்பட்டுள்ளது. இந்த வாகனம் 01.09.1999 அன்று மதுரை தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தற்காலிக பதிவு செய்யப்பட்டு 01.09.1999 முதல் 30.09.1999 வரை அனுமதிக்கப்பட்டது. அதற்காக வரியாக ரூ.440/- மற்றும் கட்டணமாக ரூ.40/-ம் சலான் எண்.373, நாள்.01.09.1999 கட்டப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் 08.09.1999 ல் திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நிரந்தர பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆயுட்கால வரியாக ரூ.21900/- மற்றும் கட்டணம் ரூ.100/- சேர்ந்து ஆக மொத்தம் ரூ.22000/- சலான் எண்.216 ன் படி கடந்த 08.09.1999 அன்று அலுவலகத்தில் செலுத்தப்பட்டு நிரந்தர பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனம் பதிவு செய்த நாள் 08.09.1999 முதல் புவனேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் பெயரிலேயே உள்ளது என அறிக்கை அளிக்கப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கையை நான்தான் ஊ.த.க பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாகன பதிவேட்டு நகலுடன் கொடுத்தேன். அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **ஆவணம் அ.த.சா.ஆ-45** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் ஊ.த.க பிரிவு சிவகங்கை அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அ.த.சா.ஆ–45ல் குறிப்பிடப்பட்டுள்ள TN 57 D 2835 என்ற வாகனம் புவனேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் பெயரில்தான் உள்ளதே தவிர 1, 2 எதிரிகள் பெயரில் இல்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை.

“Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct”

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.11.06 18:30:55 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.